1971 டிசம்பர் 14]

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசின் சார்பாக இங்கே அமைக்கப்பட்டிருக்கும் திரைப்பட நிலையத்தைப்போன்று வேறு மாநிலங்களில் அரசின் சார்பாக திரைப்படக் கூடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு இடங்களில் மாநில அளவிலே இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் பூனாவில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஒரு ஸ்டூடியோ இருப்பதாக அறிகிறேன்.

கிருஷ்ணராயபுரம் உயர்நிலைப்பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம்

* 350 வின—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் உயர்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்வி ஆண்டு 1971-72-ல் இப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த ஆய்வுக்கூடத்திற்கு அரசாங்கம் எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்காக கட்டிடத்திற்காக 25,000 ரூபாயும், அறிவியல் கருவிகளுக்காக 15.000 ரூபாயும் ஆக 40,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பொன்னேரி கலைக்கல்லூரியில் பட்ட மேம்படிப்புத் துவக்கம்

* 351. வின—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி கலைக்கல்லூரியில் எம். ஏ., எம். எஸ்சி., பட்ட வகுப்புகளைத் தொடங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொன்னேரிக் கல்லூரியில் பட்ட மேல்படிப்பு பயிற்சிக்கு வசதி செய்வதற்கான செயற்குறிப்பு இப்போது இல்லை.